**மத்துகம பிரதேச சபை 2022**

-------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

மத்துகம பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் மத்துகம பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை

அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நியமத்தின் அத்தியாய இலக்கம் 3.27 முதல் 3.32 வரை குறிப்பிடப்பட்ட பந்திகளுக்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் காசுப்பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்படும். | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்று தயாரித்தல் வேண்டும். |
| (ஆ) | நியமத்தின் அத்தியாய இலக்கம் 6.10 மற்றும் 6.11 இன் பிரகாரம் சபையினால் முன்னைய ஆண்டுகளைப் போன்று மீளாய்வாண்டிற்காகவும் நிலையான சொத்துக்களின் பெறுமானத் தேய்வு கீராக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் போது நிலையான சொத்துக்களை மதிப்பீடு செய்து அந்த சொத்துக்களுக்காக பெறுமானத் தேய்வு சீராக்கம் மேற்கொள்ளப்படும். | நியமத்தின் பிரகாரம் நிலையான சொத்துக்களுக்காக பெறுமானத் தேய்வு சீராக்கப்படல் வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்காக அரசாங்கத்திலிருந்து கிடைத்த மூலதன மானியம் முறையே ரூபா 122,809,943 தொகை, ரூபா 17,804,231 மற்றும் ரூபா 4,185,651 மிகையில் அல்லது பற்றாக்குறையில் இனங்காணப்படாத மூலதன மானியக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டில் நிதிக்கூற்றுக்களில் சரிசெய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | அரசாங்கத்திலிருந்து கிடைத்த மூலதன மானியம் சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுளின் போது அமுல்படுத்தப்பட்ட ரூபா 150,475,217 ஆன வீதிகள், மதகுகள் மற்றும் பாலங்கள் நிர்மாணத்தின் 250 செயற்றிட்டங்கள் நிலையான சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | வீதிகள், மதகுகள் மற்றும் பாலங்கள் நிலையான சொத்தாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (இ) | 2021 ஆம் ஆண்டிற்காக மீளாய்வாண்டின் போது கிடைத்த சம்பள மீளளிப்புப் பணம் ரூபா 8,352,453 தொகை வரவு வைக்க வேண்டிய சம்பள மீளளிப்பு கணக்கு செலவு வைப்பதற்கு பதிலாக நடப்பாண்டின் சம்பள மீளளிப்பு வருமானக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | சம்பள மீளளிப்பு வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட நூலகப் புத்தகங்கள், பொறிகள் மற்றும் அலுவலக உபகரணங்களின் கூட்டுமொத்தம் ரூபா 1,370,848 உரிய சொத்துக் கணக்கில் வரவு வைத்து காசுக் கணக்கில் செலவு வைப்பதற்கு மேலதிகமாக அந்த பெறுமதியால் சொத்துக்களின் கொள்வனவு செய்தல் செலவினக் கணக்கில் வரவு வைத்து ஒதுக்கம் மற்றும் ஏற்பாட்டுக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்தல் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (உ) | 2022 திசம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 77,200 ஆன கூட்டுப்பசளை இருப்பின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | சகல இருப்புக்களும் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

**1.7 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் (158) ஆம் பிரிவு | நிலுவை ஆதன வரியை அறவிடும் இறுதி படிமுறையாக ஆதனங்கள் தடைசெய்யப்பட்டிருக்க வில்லை. | நாட்டில் காணப்பட்ட கலவர நிலைமையின் காரணமாக ஆதனங்களை தடைசெய்வதற்கு அனுப்ப முடியாதிருந்ததுடன் எதிர்காலத்தில் ஆதனங்களைத் தடைசெய்யும் நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளது. | பிரதேச சபைகள் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 22,666,765 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 26,494,865 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரியும் வரியும் | 14,949,575 | 14,746,013 | 10,469,809 | 4,276,204 | 14,878,575 | 14,199,906 | 9,588,677 | 4,611,229 |
| (ii) | வாடகை | 6,813,555 | 6,732,091 | 5,201,651 | 1,530,440 | 7,124,300 | 6,416,348 | 5,153,803 | 1,262,545 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 430,000 | 374,550 | 370,800 | 3,750 | 420,000 | 392,060 | 387,860 | 4,200 |
| (iv) | ஏனைய வருமானம் | 2,374,000 | - | 3,786,611 | - | 906,780 | - | 5,099,451 | - |
| | மொத்தம் | 24,567,130 | 21,852,654 | 19,828,871 | 5,810,394 | 23,329,655 | 21,008,314 | 20,229,791 | 5,877,974 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆதனவரி காலப் பகுப்பாய்வின் பிரகாரம் 01-03 வருடங்களுக்கிடையிலான நிலுவை ரூபா 3,491,705 ஆகவும், 03-05 வருடங்களுக்கிடையிலான நிலுவை ரூபா 1,189,165 ஆகவும், 05-10 வருடங்களுக்கிடையிலான நிலுவை ரூபா 661,005 ஆகவும் இருந்ததுடன் 10 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவை ரூபா 163,037 ஆகும். | நிலுவை வருமானம் மற்றும் சிட்டையிடப்பட்ட வருமானத்தை விரைவாக அறவிடுவதற்காக விசேட வேலைத்திட்டமொன்று ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் அது வெற்றிகரமாக அமுல்படுத்தப்படுகின்றது. | நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான 105 கடைகளில் 03 கடைகள் மூடப்பட்டிருந்ததுடன் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவைக் கடை வாடகைகளின் கூட்டுமொத்தம் ரூபா 2,054,750 ஆக இருந்தது. | மூடப்பட்டுள்ள கடைகளை மீண்டும் வாடகையாளர்களுக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் நிலுவை வாடகையில் இதுவரையில் ரூபா 936,000 அறவிடப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (இ) | மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்தும், ஏனைய அதிகாரத் தரப்பினரிடம் இருந்தும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 15,000,000 ஆகவும், முத்திரைக் கட்டணம் ரூபா 118,424,750 ஆகவும் காணப்பட்டது. | 2023.12.31 இல் உள்ளவாறு முன்னைய பட்டோலைகள் தயாரித்து வருமானத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிலுவை நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டண வருமானத்தை விரைவாக பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் அத்தியாய இலக்கம் 18.7 இன் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை மீள்மதிப்பீடு செய்யும் நியமத்திற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்குமாறு கருதப்பட்ட போதும் சபையின் புதிய கணக்கீட்டு நியமங்களை பின்பற்றும் போது கட்டிடங்கள் தவிர ஏனைய நிலையான சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் போது சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உள்ளூராட்சி நிறுவனங்கான பொதுத்துறை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க நிலையான சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்படல் வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடை வாடகை உடன்படிக்கை 03 வருடங்களுக்கு மாத்திரம் செல்லுபடியானதாக இருந்த போதிலும் செல்லுபடிக் காலத்தை விஞ்சிய பின்னரும் வாடை உடன்படிக்கை புதுப்பிக்கப்படாமல் வாடகை கடை உரிமையாளர்கள் தமது வியாபாரங்களை நடாத்திச் சென்றிருந்ததுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமல் 13 கடைகள் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் சகல கடைகளினதும் உடன்படிக்கையை புதுப்பிப்பதற்கும் உடன்படிக்கை செய்யாத கடைகளுக்காக உடன்படிக்கை செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. | கடைகளின் உடன்படிக்கையை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்.**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 பெப்ரவரி 13 ஆம் திகதி மற்றும் 2020 பெப்ரவரி 14 ஆம் திகதிகளில் கொள்வனவு செய்யப்பட்ட முறையே ரூபா 1,729,988 மற்றும் ரூபா 1,236,600 ஆன 02 மின்பிறப்பாக்கிகள் 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் அந்த 02 மின்பிறப்பாக்கிகளையும் வாடகைக்கு வழங்கும் வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. | மின்பிறப்பாக்கிகளை பயன்படுத்துவதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஏப்ரல் 26 ஆம் திகதி பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்ட JCB இயந்திரத்திற்காக ரூபா 571,100 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | பழுதுபார்த்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டு பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் வாகனத்தில் காணப்பட்ட வழுக்கள் மீண்டும் ஏற்பட்டமையினால் பழுதுபார்த்தலை பூர்த்தி செய்ததன் பின்னர் வாகனம் சபைக்கு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பழுதுபார்த்தல் நடவடிக்கைகளை விரைவாக பூர்த்தி செய்து வாகனத்தை ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான காணியாக இனங்காணப்பட்ட 252 காணிகளில் 48 காணிகளுக்குரிய சட்டரீதியான உரித்தை உறுதிப்படுத்துவதற்கு உரிய ஆவணங்கள் சபையிடம் காணப்படவில்லை. | 48 காணிகள் சபை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சபைக்குச் சொந்தமான காணிகளுக்காக சட்டரீதியான ஆவணங்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2015 ஆம் ஆண்டில் சபைக்கு கிடைக்கப்பெற்ற ஸ்ட்ரியர் லோடர் இயந்திரம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சபையின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த இயந்திரம் தொடர்பாக எந்தவொரு ஆவணமும் இயந்திரத்தை நன்கொடையளித்த உள்ளூராட்சித் திணைக்களத்திடம் காணப்படவில்லை. | தேவையான ஆவணங்களை பெற்று இயந்திரத்தை சபையின் பேரில் பதிவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

### 3.5 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் பெலிவத்த கந்த நீர் செயற்றிட்டத்திற்காக மேல்மாகாண உள்ளூராட்சி திணைக்களம் ரூபா 2,000,000 தொகையினை சபைக்கு வழங்கியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தண்ணீர் மோட்டார் மற்றும் நீர் குழாய்கள் மாத்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் மக்களின் குடிநீர் தேவை பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட பணம் போதியளவாக இல்லாமையினால் கட்டம் 02 இன் கீழ் வேலைகளை பூர்த்தி செய்வதற்காக ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தை விரைவாகப் பூர்த்தி செய்து மக்களுக்கு அதன் நலன்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |